திருப்பூர் மாவட்டம், கரூர் மாவட்டம், அதேபோல திண்டுக்கல் மாவட்டப் பகுதி, அமராவதி ஆற்றுப் பாசனத்திற்குட்பட்ட அனைத்துப் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர்களும் மகிழ்ச்சியடையக்கூடிய வகையிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனைத்துத் திட்டங்களுமே நமக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல, திருமூர்த்தி, அமராவதி அணைகளையும் தூர்வாரக்கூடிய திட்டமும் நடைமுறையிலே இருக்கிறது என்று கூறினார்கள். அதையும் உடனடியாகச் செய்து தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு, அனைத்துத் திட்டங்களையும் நிறைவேற்றி முடித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி விடைபெறுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 345, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா.கோ. ரமேஷ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

345—

கால்நடை மருத்துவமனை

***6970—திரு. கா.கோ. ரமேஷ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, புதூர்நாட்டில் உள்ள கால்நடைக் கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தொகுதி, ஜவ்வாது மலை, ஆலங்காயம் ஊராட்சியிலே உள்ள, புதூர்நாடு கிராமத்திலே உள்ள கால்நடைக் கிளை நிலையம், மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஒரு கால்நடைக் கிளை நிலையம், மருத்துவமனையாக, மருந்தகமாகத் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால், 5,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலே 4,300 கால்நடை அலகுகள்தான் இருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே இல்லையென்று சொல்ல மனம் வரவில்லை. எனவே, அங்கே இரண்டு வாய்ப்புகள் இருக்கின்றன. இப்போது புதிதாக கால்நடைகளைக் கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறோம். அதிலே கால்நடைகள் எண்ணிக்கை உயர வாய்ப்பு இருக்கிறது.

இரண்டாவதாக, ஏழைகளும் எளியவர்களாக உள்ள விவசாயப் பெருமக்களெல்லாம் பொருளாதாரத்திலே உயர வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்ட விலையில்லா ஆடுகள், கறவைப் பசுக்கள் வழங்குகின்ற திட்டத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதிக்கு இந்த ஆண்டு கால்நடைகள் வழங்கப்படும்போது எண்ணிக்கை உயர வாய்ப்பு இருக்கிறது. எனவே, கால்நடைகள் எண்ணிக்கை உயரும்போது அந்தப் பகுதியிலே கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. ரமேஷ் அவர்கள்.

முற்பகல் 11-30

திரு. எஸ்.கே. ரமேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழகத்தின் அறிவுத் திருக்கோயிலாம், திராவிடப் பாரம்பரியத்தின் பிறவித் தாரகையாம்,

இக்கற்றவர்களுக்கு திசை காட்டும் தீபச் சுடராம், மகுடத்தோடு பிறந்த மாணிக்கத் தலைவியாம், புழுதி மண்ணுக்கும் புனிதத்தைத் தரும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய (மேசையைத் தட்டும் ஒலி) பெருமைக்குரிய பாதங்களை வணங்குகிறேன். அம்மா, கிருஷ்ணன் பிறந்ததுதான் தேவகிக்குத் தெரியும். ஆனால், அவனுக்கு எப்போது பசிக்கும் என்பது யசோதைக்குத்தான் தெரியும். என்னை ஈன்று எடுத்தது எனது தாயாக இருந்தாலும், எனக்கு என்ன தேவை என்பதை உணர்ந்து, யசோதையாக காட்சி அளிக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருமைக்குரிய (மேசையைத் தட்டும் ஒலி) பாதங்களை நன்றியோடு வணங்குகிறேன்.

எனது திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, கந்திலி ஒன்றியம், காக்கங்கரை ஏரிக்கு கால்வாய் அமைத்துத் தருவதற்கு இரண்டு கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, காக்கங்கரை, நத்தம், கன்னாளப்பட்டி, செவ்வாத்தூர், வெல்டப்பனூர், பரதேசிப்பட்டி போன்ற விவசாய மக்களுடைய 65 ஆண்டுகால கோரிக்கைகளை நிறைவேற்றிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், தொகுதி மக்களின் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாது மலையில் அமைந்திருக்கின்ற புதூர்நாடு, நெல்லிவாசல்நாடு, புங்கம்பட்டுநாடு ஆகிய மலைசேர்ந்த கிராமங்களுக்குக் கால்நடைக் கிளை நிலையத்தைக் கால்நடை மருத்துவமனையாக அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான அரசு பரிசீலிக்கும் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்கு என் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, திருப்பத்தூர் ஒன்றியத்தில் நாதபள்ளி, குரும்பேரி, டி. கிருஷ்ணாபுரம், புதுக்கோட்டை, பிச்சனூர் பகுதியில் சுமார் 14,500-க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளதால் புதிய மருந்தகம் ஒன்று மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லரசு அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டு நன்றியோடு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2013 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 346, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பழனிச்சாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

346—

பேருந்து வசதி

***24729—திரு. ஈ. பழனிச்சாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் இருந்து பல்லடம், தாராபுரம், ஒட்டன்சத்திரம், வேடசந்தூர் வழியாக வடமதுரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குறிப்பிட்ட கரம் விரியும் முன், வரம் தரும் அன்னை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க 30-9-2012 அன்று முதல் கோயம்புத்தூரிலிருந்து பல்லடம், தாராபுரம், ஒட்டன்சத்திரம் மற்றும் வேடசந்தூர் வழியாக வடமதுரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)